தினமணி 12/02/2020

# பொறியியல் கல்லூரிகளில் 1:15 ஆசிரியர்–மாணவர் விகிதாசாரம்

## உறுதிப்படுத்த அண்ணா பல்கலைக்கழகம் தீவிரம்

**சென்னை, பிப்.11:** அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் (ஏஐசிடிஇ) அறிவுறுத்தியுள்ளபடி தன்னாட்சி மற்றும் நாக் அங்கீகாரம் பெற்ற பொறியியல் கல்லூரிகளில் 1:15 ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தை உறுதிப்படுத்த அண்ணா பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளது.




ஏஐசிடிஇ-யின் இந்த புதிய உத்தரவு காரணமாக, வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் பலருக்கு வாய்ப்புக் கிடைக்கும் நிலை உருவாகியிருப்பதாகவும் பேராசிரியர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**குறைக்கப்பட்ட ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம்:** பொறியியல் கல்லூரிகளில் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 1:15 என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், மாணவர் சேர்க்கை குறைவு, தகுதியான பேராசிரியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த விகிதாசாரத்தை குறைக்க வேண்டும் என தனியார் கல்லூரி நிர்வாகிகள் சார்பில் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்தக் கோரிக்கையை ஏற்ற ஏஐசிடிஇ, அனைத்து பொறியியல் கல்லூரிகளுக்கும் 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் (1:15) என்ற அளவில் இருந்த விகிதாசாரத்தை, 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் (1:20) என்ற அளவில் குறைத்தது.

ஏஐசிடிஇ-யின் இந்த நடவடிக்கை காரணமாக நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பேராசிரியர்கள் வேலையிழக்கும் நிலை உருவானது. இந்தச் சூழலில் 2020-21-ஆம் கல்வியாண்டு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான அனுமதி நடைமுறையை ஏஐசிடிஇ அண்மையில் வெளியிட்டது. இதில், பொறியியல், தொழில்நுட்பப் படிப்புகளை வழங்கும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், நாக் மற்றும் என்.பி.ஏ. அங்கீகாரம் பெற்ற பொறியியல் கல்லூரிகள் மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தை மீண்டும் 1:15 என்ற அளவில் உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. இதை தீவிரமாக நடைமுறைப்படுத்த அண்ணா பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அண்ணா பல்கலைக்கழக உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், ஏஐசிடிஇ அறிவுறுத்தியுள்ளபடி, தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் நாக், என்.பி.ஏ. அங்கீகாரம் பெற்ற பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 1:15 என்ற அளவில் இருக்க வேண்டும். பல்கலைக்கழக குழு ஆய்வுக்கு முன்பாக, உரிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை பொறியியல் கல்லூரிகள் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களுடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்படமாட்டாது என்றார்.

இதுகுறித்து அகில இந்திய தனியார்கல்லூரிஊழியர்சங்கநிறுவனர் கார்த்திக் கூறுகையில், இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது. இதன்மூலம், உரிய தகுதி பெற்று பல ஆண்டுகளாக காத்திருக்கும் பலருக்கு பேராசிரியர் பணிவாய்ப்பு கிடைக்கும். மாணவர் கல்வி நலனும் பேணி காக்கப்படும் என்றார்.